# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.

## Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre

## Annai poopathi Tamil Cultural Centre Central committee

13.04.2024

வணக்கம்!

வைத்வெத்வளாக நிருவாகத்தினர், அங்கத்தவர்களுக்கு

ஆண்டுக்கூட்டத்தில் முடிவெடுத்துள்ளதற்கு அமைவாக 13.04 பிரத்தியேக ஆண்டுக்கூட்டம் நிருவாகம் பற்றி கலந்துரையாடுவதற்கு அங்கத்தவர்களால் ( பொற்றோரால்) ஆண்டுககூட்டத்தில் முடிவெடுத்துப் போடப்பட்டது என்று தங்களால் எமக்கு தெரிவிக்கப்பட்டது. தங்களின் ஆண்டுக்கூட்ட அறிக்கையில் 4 வாரங்களுக்குள் புதிய நிருவாகம் அறிமுகப்படுத்தப்படும் என்பது எழுதப்பட்டுள்ளது.

பிரத்தியேக ஆண்டுக்கூட்டத்தில் அது சார்ந்து போடப்படும் விடயம் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். பிரத்தியேக ஆண்டுக் கூட்டத்தை மாற்றி அமைத்தல் முறையற்றது. பிற்போடுவதானால் பிற்போடுவதற்கு இவ் ஆண்டுக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயம் சார்ந்து பெரிய வலுவான காரணம் இருத்தல் வேண்டும். தெரிவுக்குழுவில் ஒருவர் விலகுதல் தெரிவுக்குழு நேர்முகம் செய்வதற்கு நேரமில்லை என்பன காரணமாக அமைய முடியாது. பிரத்தியேக ஆண்டுக்கூட்டத்தை 13.04 அன்று பிரத்தியேக ஆண்டுக்கூட்டத்தை முடிவெடுத்துப் பிற்போடலாம். ஆயினும் வேறு விடயங்களுக்காக பிரத்தியேக ஆண்டுக்கூட்டத்தை மாற்ற முடியாது.

தெரிவுக் குழுவில் உள்ளவர்கள் விலகுதல் அவர்களின் தனிப்பட்ட முடிவு. இவர்கள் விலகுவதற்கான தகுந்த காரணத்தை எழுத்து மூலம் தெரிவித்து விலகவேண்டும். காரணத்தை தெரிந்து கொள்வதற்கு நாம் ஆவலாக உள்ளோம். நிருவாகத் தெரிவில் இதுவரையும் பங்குபற்றி விட்டு தெரிவுக்கு குறுகிய காலம் இருக்குப்போது விலகுதல் முறையற்றதாகக் கருதப்படும். தெரிவுக் குழுவில் உள்ளவர்கள் நிருவாகத் தெரிவில் அதே ஆண்டு ஈடுபடுதல் நிறுவனப் பண்பு நெறிகளுக்கு அப்பாற்பட்டது. தெரிவுக்குழுவில் ஒருவர் இல்லை என்பதற்காக பிரத்தியேக ஆண்டுக் கூட்டத்தை மாற்றி அமைக்கமுயாது.

வளாக நலனையும் நிறுவன கட்டுக் கோப்புக்களையும் கருத்தில் எடுத்து நிருவாகம் தெரிவு செய்யப்படல் வேண்டும் என்பது எமது தாழ்மையான கருத்து. புதிய நிருவாகத்திற்கு ஒப்புதல் அளிக்கும் பொறுப்பும் கடமையும் அன்னை தலைமை நிருவாகததிற்கே உள்ளது என்பதை தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தவிர்க்க முடியாத கரணத்தினால் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் உள்ளதை இட்டு மனம் வருந்துகிறோம்.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம் 2024